**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.53/2023**

நாள்.12.09.2025

**வா.சா.1. 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அம்மா, அப்பா சொத்தில் 5ல் ஒரு பாகத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்குரையில் எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 26 சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் அனைத்தும் ஒரே கிராமத்தில் உள்ளதா என்றால் திருத்தங்கூர் கிராமத்தில் தான் உள்ளது. தாவா அனைத்து சொத்துகளுக்கும் உண்டான சர்வே எண்கள், நான்கெல்லைகள் மற்றும் விஸ்தீர்னம் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. வயல்களை பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் அனைத்தும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தா அல்லது எனது பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தா என்றால் எனது பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். எனது பெற்றோர்களுக்கு என்னை தவிர மற்ற 5 நபர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது அண்ணன் தனபால் என்பவர் வாரிசு இல்லாமல் இறந்து போய்விட்டார். என்னுடன் பிறந்த ஜெயராமன், சௌந்தர்ராஜன், தயாளன், பத்மினி ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். எனது சகோதரர், சகோதரி ஆகியோர்களின் வாரிசுச்சான்றிதழ், இறப்புச்சான்றிதழ்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எல்லா சொத்துக்களுக்கும் எனது பெற்றோர்களின் பெயரில் பட்டா உள்ளதா என்றால்

உள்ளது. எனது பெற்றோர்கள் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வீட்டில் இருந்த எல்லா பத்திரங்களையும் ஐயப்பன் என்பவர் எடுத்து சென்றுவிட்டார் என சாட்சியம் அளிக்கிறார். ஐயப்பன் என்பவர் எந்த தேதியில் எனது பத்திரங்களை எடுத்து சென்றுவிட்டார் என்றால் ஞாபகமில்லை. மேற்கண்ட விவரங்களை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வழக்குரையில் சொத்து வழக்கு 1 முதல் 23 சொத்துக்கள் குடும்ப பூர்வீக சொத்து என்பதால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரர் சௌந்தர்ராஜன் என்பவரின் மகன் ஐயப்பன் என்பவர் எடுத்துச் சென்றதாக கூறும் கிரயப்பத்திரங்களின் சான்றிட்ட நகல்களை வாங்கி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை எந்த வருடம் இறந்து போனார் என்றால் 1988–ல். எனது தாயார் 2006–ல் இறந்துவிட்டார். எனது தாயார் இறக்கும்போது என்ன வயது இருக்கும் என்றால் 80 வயது இருக்கும். எனது தாயார் உடல் நிலை சரியில்லாமல் 2 ஆண்டுகளாக இருந்து வந்தார். மனநிலை சரியில்லாமல் இருந்தார். வயது முதிர்வின் காரணமாக இறந்துவிட்டார். எனது தாயாருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோது நான் தான் மருத்துவ சிகிச்சை செய்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கூரை வீட்டில் வசித்து வந்ததால் கூரை வீடு இடிந்து போனதால் மேற்படி ஆவணங்கள் எல்லாம் காணாமல் போய்விட்டது. என் தாயாருக்கு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மனநிலை மருத்துவரிடம் வைத்தியம் பார்த்தேனா என்றால் எனக்கு மருத்துவரின் பெயர் தெரியாது. மருத்துவர் என் வீட்டிற்கு வந்து என் தாயாருக்கு சிகிச்சை அளித்தார். கிரயப்பத்திரங்கள் என் குடிசை வீடு இடிந்த போது காணாமல் போய்விட்டதா என்றால் என் அம்மா வீட்டில் இருந்து தான் காணாமல் போய்விட்டது. அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மற்ற சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்து விவரத்தில் கண்ட 26 இன சொத்துக்களில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் என் அம்மாவுக்கு சொந்தமானது என்றால் 26 இன சொத்துகளும் என் அம்மாவுக்கு சொந்தமானது. தாவா பி அட்டவணையில் கண்ட சொத்தின் மொத்த விஸ்தீர்னம் எவ்வளவு என்றால் 7 ஏக்கர். 7 ஏக்கரில் 3.1/2 ஏக்கர் நிலத்தை எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்துவிட்டார். எந்த தேதியில் எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் 1982–ல். தேதி, மாதம் ஞாபகமில்லை. 1982–ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 20 வயது இருக்கும். சாட்சி மீண்டும் எனக்கு திருமணம் ஆனவுடன் எனது தாயார் எனக்கு கொடுத்துவிட்டார். 1982–ல் எனது தாயார் எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் சொத்துகள் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் நான் இளவராக இருந்ததால் எனது தாயார் பெயரில் பதிவு செய்யப்பட்டு நான் உரிய வயதை அடைந்த பிறகு எனது தாயார் என்னிடம் ஒப்படைத்து விட்டார். மேற்கண்ட ஆவணங்கள் ஏற்பட்ட தேதி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 1982–ல் ஏற்பட்ட பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துகளில் 5 ல் ஒரு பாகம்

நான் கேட்பது எல்லா சொத்துகளும் கூட்டாக இருப்பதால் தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணம் எந்த காரணத்திற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் திருத்தங்கூரில் உள்ள சொத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் ரூ.300/– ஐ செலுத்தி சபாபதி முதலியார் செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்ட சொத்தை எனது தந்தை கிரயம் வாங்கிய சொத்து தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் கண்ட சொத்து தாவா ஏ அட்டவணையில் கண்ட சொத்திற்குண்டான ஆவணமா அல்லது பி அட்டவணையில் கண்ட சொத்திற்குண்டான ஆவணமா என்றால் பி அட்டவணையில் கண்ட சொத்துக்களுக்குண்டான ஆவணமாகும். எனது அம்மா வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 1/2 கி.மீ துாரம் இருக்கும். எனக்கு எந்த வருடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் 1982–ல். நான் திருமணமாகி எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன். தாவாவில் கண்ட 26 சொத்துகளுக்கு உண்டான அனைத்து ஆவணங்களும் எனது தாயார் தான் வைத்திருந்தார். எனது தாயார் சொந்தமாக விவசாய வேலை பார்த்து வந்தார். எனது தாயார் கடைசி வரை விவசாயம் பார்த்து வந்தாரா என்றால் உடல் நிலை நல்ல நிலையில் உள்ளவரை பார்த்து வந்தார். தாவா சொத்துகளை பாகம் பிரித்து கொடுக்கும்படி எனது சகோதரர் மற்றும் சகோதரிகளிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். சொத்துகள் பாகம் பிரிப்பது சம்பந்தமாக மத்தியஸ்தர்களை வைத்து கேட்டேனா என்றால் கேட்டேன். மத்தியஸ்தர்களை வைத்து பேசியபோது யார் யாருக்கு

என்னென்ன சொத்துகள் ஒதுக்கப்பட்டது என்பது சம்பந்தமாக எழுத்து மூலமாக எழுதி கையெழுத்துகள் ஏதேனும் போட்டுள்ளீர்களா என்றால் பஞ்சாயத்தில் பேசியது எல்லோரும் ஒத்துக்கொள்ளாததால் யாரும் கையெழுத்துகள் போடவில்லை. என்ன காரணத்தினால் பஞ்சாயத்து பேசப்பட்ட போது கையெழுத்து போடவில்லை என்றால் பாகம் பிரிக்கப்பட்டது சரியில்லை என்பதால் கையெழுத்து போடவில்லை. தாவா பி அட்டவணை சொத்தையும் சேர்த்து பிரிக்க வேண்டும் என்று கேட்டதால் நான் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. 09.03.2004–ல் எனது தாயார் சுலோச்சனா அவரது சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தாயார் நல்ல சுயநினைவுடன், நல்ல மனநிலையிலும் அவர் விருப்பப்பட்டு 5வது பிரதிவாதியின் தந்தை சௌந்தர்ராஜன் என்பவருக்கு ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் என் தாயார் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. திருநெல்லிக்காவல், மங்களநாயகி கோவிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் தை மாதம், ரூ.5,000/–ற்கு குறைவில்லாமல் விஷேசம் செய்து வருகிறீர்களா என்றால் பரம்பரையாக செய்து வருகிறோம். தற்போது ஐயப்பன் என்பவர் செய்து வருகிறார் என்றால் எல்லோரும் செய்து வருகிறோம்.

**4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.